**சுருக்கம்**

சமூக சீர்திருத்தத் துறை – அறிவிப்பு – சமூக நீதிக் கண்காணிப்புக் குழு – கல்வி, வேலைவாய்ப்பு, பதவிகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றில் சமூக நீதி அளவுகோல் முறையாக முழுமையாக பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கக் குழு அமைத்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**சமூக சீர்திருத்தத் துறை**

**அரசாணை (நிலை) எண்.02** **நாள் 24.12.2021**

**பிலவ வருடம், மார்கழி 9**

**திருவள்ளுவர் ஆண்டு 2052**

**படிக்கவும்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடு, நாள் 23.10.2021 மற்றும் 24.10.2021.

-----

## ஆணை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமூக நீதி அரசாணையின் நூற்றாண்டு நாளினையொட்டி பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

"சமூக நீதி அளவுகோலானது சட்டப்படி முழுமையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்காக தமிழ்நாடு அரசால் **"சமூக நீதிக் கண்காணிப்புக் குழு"** அமைக்கப்படும் எனவும், இக்கண்காணிப்புக் குழு கல்வி, வேலைவாய்ப்பு, பதவிகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றில் சமூக நீதி அளவுகோல் முறையாக முழுமையாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும், வழிகாட்டும், செயல்படுத்தும் பணிகளை மேற்கொள்வதோடு, இவை சரியாக நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், உரிய நடவடிக்கை எடுக்க அரசுக்குப் பரிந்துரை செய்யும் எனவும், இக்குழுவில் அரசு அலுவலர்கள், கல்வியாளர்கள், சட்ட வல்லுநர்கள் இடம் பெறுவார்கள் எனவும் அறிவித்துள்ளார்கள்."

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க கீழ்காணும் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்து, **"சமூக நீதிக் கண்காணிப்புக் குழு"**வினை அமைத்து ஆணை வெளியிடப்படுகிறது:–

1. பேராசிரியர் திரு.சுப.வீரபாண்டியன் – தலைவர்
2. முனைவர் கே.தனவேல், இ.ஆ.ப., (ஓய்வு) – உறுப்பினர்
3. பேராசிரியர் முனைவர் சுவாமிநாதன் தேவதாஸ் – உறுப்பினர்

4. கவிஞர் திரு.மனுஷ்யபுத்திரன் – உறுப்பினர்
5. திரு.ஏ.ஜெய்சன் – உறுப்பினர்
6. பேராசிரியர் முனைவர் ஆர்.இராஜேந்திரன் – உறுப்பினர்
7. திரு.கோ.கருணாநிதி – உறுப்பினர்
8. மருத்துவர் சாந்தி ரவீந்திரநாத் – உறுப்பினர்

இக்குழுவில் சமூக சீர்திருத்தத் துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் உறுப்பினர் – செயலராக அங்கம் வகிப்பார்.

3. சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவின் நெறிமுறைகளும், வரையறைகளும் பின்வருமாறு:–

I. அரசு ஆணைகள் மற்றும் விதிகளின்படி கல்வி, வேலைவாய்ப்பு, நியமனங்கள் மற்றும் பதவி உயர்வு ஆகியவற்றில் இடஒதுக்கீடு முறையாக செயல்படுத்தப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்த்து, எந்தவொரு துறையிலும் ஏதேனும் குறைபாடுகள் காணப்பட்டால், குழு தனது பரிந்துரைகளை அளிக்கும்.

II. வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பணி நியமனம் செய்யும் போது, முதல் தலைமுறை மாணவர்கள், தமிழ் வழியில் படித்தவர்கள் மற்றும் இது போன்ற பிற பிரிவுகளுக்கான முன்னுரிமை, இடஒதுக்கீடு ஆகியவை நடைமுறையில் உள்ள விதிகளின்படி முறையாகப் பின்பற்றப்பட்டுள்ளதா என்பதைக் குழு சரிபார்க்கும். தற்போதுள்ள விதிமுறைகள் மற்றும் அரசு ஆணைகளின்படி முன்னுரிமைப் பிரிவினர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் போதுமான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைக் குழு பரிந்துரைக்கும்.

III. சாதி அல்லது பாலினத்தின் அடிப்படையில் எந்தவொரு தனிநபருக்கும் வாய்ப்புகள் மறுக்கப்படவில்லை என்பதை இக்குழு உறுதி செய்யும். இந்தக் குழு மத்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு நலத்திட்டங்களை ஆய்வு செய்து, சமூக சமத்துவத்தை நோக்கமாகக் கொண்ட திட்டங்கள் தங்கள் இலக்குகளை எய்துள்ளனவா என்பதை ஆய்வு செய்து, தேவைப்பட்டால் சரியான திருத்தங்களைச் செய்வதற்கான நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கும்.

IV. மனித கழிவுகளை மனிதர்களே அகற்றும் முறையினை கண்டிப்பாக ஒழிப்பதில் உள்ளாட்சி அமைப்புகள் எடுக்கும் முயற்சிகளைக் குழு மதிப்பீடு செய்யும்.

V. சமூக நீதியின் முக்கியத்துவம் மற்றும் சமூக சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான மாநிலத்தின் முன்னோடி முயற்சிகள் குறித்து இளைஞர்களுக்கு குறிப்பாக, பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உள்ள மாணவர்களுக்கு உணர்த்துவதற்கான நடவடிக்கைகளைக் குழு பரிந்துரைக்கும்.

VI. சமூக நல்லிணக்கத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் சமூக ஊடகங்களை தவறாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான வழிவகைகளைக் குழு பரிந்துரைக்கும், மேலும் அச்சு, காட்சி மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி சமூகநீதி மற்றும் வகுப்புவாத நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் வழிவகைகளையும் குழு பரிந்துரைக்கும்.

VII. சமூக நீதியின் அடிப்படையிலான முற்போக்கான சிந்தனையை வளர்த்தெடுக்கவும், தந்தை பெரியார் கண்ட சீரிய சமூகம் அமைய வழிவகுக்கவும் குழு பாடுபடும்.

VIII. குழுவானது தங்கள் நோக்கத்திற்காக பொருத்தமானதாகக் கருதப்படும் தகவல்களை அத்தகைய வடிவத்தில் அதிகாரிகள், அமைப்புகள் அல்லது அவசியமாகக் கருதப்படும் தனிநபர்களிடமிருந்து பெறலாம்.

IX. குழுவானது அதன் உறுப்பினர்களில் இருந்து துணைக் குழுக்களை உருவாக்கலாம் மற்றும் குறிப்பிட்ட இடைவெளிகளில் அவசியமாகக் கருதப்படும் இடங்களில் அமர்வுகளை நடத்தலாம்.

X. குழு ஆய்வு நோக்கத்திற்காக பயணம் செய்யலாம். மேலும் கள ஆய்வையும் மேற்கொள்ளலாம்.

XI. குழுவானது, அத்தகைய ஆய்வு அல்லது கணக்கெடுப்பைத் தாமே மேற்கொள்ளலாம் அல்லது தேவைப்படின் ஏதேனும் தகுதி வாய்ந்த கல்வி நிறுவனங்கள் மேற்கொள்ள ஆணையிடலாம்.

XII. இக்குழு, இவ்வரசாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து 2 ஆண்டுகள் செயல்படும்.

XIII. இக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு அமர்வு கட்டணமாக ஒரு அமர்விற்கு ரூ.2,000/- வழங்கப்படும்.

XIV. இக்குழு, முதல் நிலைக்குழுவாக (First Class Committee) கருதப்படும். எனவே, முதல் நிலைக்குழுவிற்கு வழங்கப்படும் பயணச்செலவுகள் போல் இக்குழுவிற்கும் வழங்கப்படும்.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.58001/நிதித் (ச.ந) துறை, நாள் 23.12.2021-இல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மங்கத் ராம் ஷர்மா
அரசு முதன்மைச் செயலாளர் (முசுஉபொ).

<u>பெறுநர்</u>
<u>தலைவர்</u>
**பேராசிரியர் திரு. சுப.வீரபாண்டியன்,**
எண்.28, SBS காலனி, ஆழ்வார்திருநகர், சென்னை-600 087.

<u>உறுப்பினர்கள்</u>
**முனைவர் கே.தனவேல், இ.ஆ.ப., (ஓய்வு)**
HIG 90, 8-வது குறுக்கு தெரு, முகப்பேறு, வெஸ்ட் கார்டன்,
நொளம்பூர், பகுதி-2, சென்னை-600 037.
**பேராசிரியர் முனைவர் சுவாமிநாதன் தேவதாஸ்,**
25, பாரதி தெரு, V.G.P. சாந்தி நகர்,
பள்ளிக்கரணை, சென்னை - 600 100.
**திரு. மனுஷ்யபுத்திரன்,**
புதிய எண்.5 (பழைய எண்.13),
பரமேஸ்வரி நகர் முதல் தெரு, அடையாறு, சென்னை - 600 020.
**திரு. ஏ. ஜெய்சன்,**
எண்.15A/27, A.K. சாமி நகர்,
6வது தெரு, கெல்லீஸ்,
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
**பேராசிரியர் முனைவர் ஆர். ராஜேந்திரன்,**
14, A முதல் தெரு, அருளானந்தம்மாள் நகர்,
தஞ்சாவூர் - 613 007.
**திரு. G. கருணாநிதி,**
109/1, பேஸ் பிரனா அபார்ட்மெண்ட்ஸ், பிளாக் 6, 3-வது தளம்,
கதவு எண்.T-4, பாடிகுப்பம் சாலை, அண்ணாநகர்,
சென்னை-600 101.
**மருத்துவர் சாந்தி ரவீந்திரநாத்,**
A1, அம்மன் அபார்ட்மெண்ட்ஸ்,
எண்.41, சாவடித் தெரு, பல்லாவரம், சென்னை - 600 043.
அனைத்து துறைச் செயலாளர்கள், சென்னை - 9.
அனைத்து துறைத் தலைவர்கள் (தலைமைச் செயலகத் துறை வழியாக).

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

மாநிலக் கணக்காயர், சென்னை -18.

மாநிலக் கணக்காயர், (தணிக்கை-I, II), சென்னை -18.

சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-9.

இருப்பிடத் தணிக்கை அலுவலர், சென்னை - 9.

இயக்குநர், கருவூலக் கணக்குகள் துறை, சென்னை -15.

**நகல்:-**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 9.

மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் மகளிர் உரிமை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9.

தலைமைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர், சென்னை - 9,

சமூக சீர்திருத்தத் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை - 9,

நிதித் (ச.ந/வ.செ.பொ-I/II/மை.ம.ஆ.பி) துறை, சென்னை - 9.

மனித வள மேலாண்மைத் துறை, சென்னை - 9.

முதன்மைச் செயலாளர் (ம) வருவாய் நிருவாக ஆணையர், சென்னை-5.

இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.

இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

24/12/2021

பிரிவு அலுவலர்